# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No.204 /2024

dated : 19.06.2025

P.W. 5

Name சபர்ணா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. குழந்தை சாட்சி என்பதால் கேள்வி பதிலாக பெறப்பட்டு பின்னர் வாக்குமூலமாக பதிவு செய்யப்பட்டது.

<u>**குறுக்கு விசாரணை**</u>

நாங்கள் சங்கன்கோவில் காந்தி நகரில் குடியிருந்தோம். என் தாயார் முன்னதாகவே இறந்துபோனார். என் அப்பாவும் வேலைக்குச் சென்று வந்தார். என் அப்பா இறந்த அன்று சங்கரன்கோவிலில் இருந்தோம். என் அப்பா இறந்தநாளில் நாங்கள் குருவிகுளத்தில் இருந்தோம். சங்கரன்கோவிலில் இல்லை. கடந்த முறை 25.04.2025 அன்று நான் நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க வரும்போது எவ்வாறு சாட்சியமளிக்க வேண்டுமென்று சொல்லிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். போலீசார் சொல்லிக்கொடுத்தார்களா என்றால் சரிதான். அவர்கள் சொல்லிக்கொடுத்தவாறுதான் சாட்சியமளித்தேன் என்றால் சரிதான். 25.04.2025 க்கு முன்பாகவும் சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் என்னை விசாரித்தார்கள். சங்கரன்கோவில் நீதிமன்றத்திலும் போலீசார் சொல்லிக்கொடுத்தப்படிதான் சொன்னேன். நான் திருநெல்வேலியில் விடுதியில் தங்கி படித்து வருகிறேன்.

என்னை விடுதிக்கு வந்து பாட்டியும், சித்தியும், சித்தப்பாவும் வந்து பார்ப்பார்கள். என் பாட்டி சமீபத்தில் என்னை பார்க்க வரவில்லை. என் அப்பா எப்படி இறந்தார் என்று போலீசார் என்னிடம் சொன்னார்கள். என் அப்பா இறந்த சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.06.19 18:07:19 +0530